கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி – 1 சுலைமான் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 02.12.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு கடந்த 2012 முதல் நடந்து வருகிறது என்றும், இவ்வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கு எந்த சர்வே எண்ணுக்கு சம்மந்தமானது என்று தெரியுமா என்றால் பழைய சர்வே எண். 88/3. தற்போதைய சர்வே எண்.26 ஆகும். நான் சொல்லும் தற்போதைய சர்வே எண் தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ–11 ஆவணத்தில் எங்காவது புல எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதி ஜெய்பூன் பீவிக்கு படிப்பறிவு இல்லை என்றால் அது பற்றி தெரியாது. பி.சா.ஆ.11 ல் 1 ம் பத்தியில் கட்டிடம் கட்ட வேண்டும் என்று தான் உள்ளது என்றால் சரிதான்.

2. பி.சா.ஆ.11 ல் குறிப்பிட்ட சர்வே எண்ணில் வாதியின் சுவர் உள்ளது என்றும், அதை பொதுவாக வாதியும், பிரதிவாதியும் அனுபவம் செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் மேற்படி ஆவணத்தில் மேலே சுவர் பாத்திய உடன்படிக்கை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எந்த திசையில் மேற்படி சுவர் உள்ளது என்றும், அதன் நீளம் மற்றும் அகலம் அதில் குறிப்பிடப்படவில்லை. பி.சா.ஆ.11 ஆவணம் ரபீக் பாஷா எழுதியதாக மேற்படி ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. ஆவணம் தயாரித்தவர் பெயர் உள்ளதா என்றால் இல்லை.

3. ஆனால் மேற்படி ஆவணம் மற்றும் அதில் உள்ள முத்திரை ஆகியவற்றை தயாரித்தவர் ரபீக் பாஷா ஆகும். பி.சா.ஆ.11 ஆவணம் ரபீக் பாஷா எழுதவில்லை என்றும், அவ்வாறு எழுதியிருந்தால் அவரது பெயர் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணமானது எனது தாயாரால் எழுதப்பட்ட ஆவணம் என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக நானும், எனது தாயாரும் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில்

2ம் பத்தியில் மைமூன் பீவி என்னுடைய வீடு கட்டுவதற்கு குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 3ம் பத்தியிலும் நான் என்ற வார்த்தை மைமூன் பீவி என்ற நபரை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. கடந்த 11.12.2024ம் அன்று எனது குறுக்கு விசாரணையில் மேற்படி சுவரானது ரூ.100/–க்கு மேல் மதிப்பு இருக்கும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.11 ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா என்றால் இல்லை. பி.சா.ஆ–11 ஆவணத்தில் ஜெய்பூன் பிவீயின் கையெழுத்து படித்தவர் போடும் கையெழுத்து போல் இல்லை என்றால் சரிதான். ஜெய்பூன் பீவிக்கு படிப்பறிவு இல்லை என்றும், பி.சா.ஆ.11 ஆவணத்தை அவர் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பர்வீன் பற்றி மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பர்வீன் கையொப்பம் செய்ததாகவும் இல்லை என்றால் சரிதான்.

5. எனது எதிருரையிலும் மேற்படி பர்வீன் என்பவருக்கு பி.சா.ஆ.11 ஆவணத்தை பற்றி தெரியும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட போலியான ஆவணம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஜெய்பூன் பீவியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. ஜெய்பூன் பீவி பி.சா.ஆ.11ல் தான் கையொப்பம் செய்யவில்லை என்றும், பி.சா.ஆ.11 கையெழுத்தை மறுத்தும் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். பி.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள கையெழுத்து ஜெய்பூன் பீவியால் போடப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய அறிவியல் முறையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.11 ஆவணத்தை பொறுத்து எனக்கு எந்த உரிமையும் எழாது என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

**20ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணையை 20ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் 20ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**<u>7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். சுவர் பாத்திய உடன்படிக்கை எப்போது ஏற்பட்டது என்றால் 04.05.2000 அன்று ஏற்பட்டது. மேற்படி உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி உடன்படிக்கையின் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya

**Additional District Munsif,**

**Kulithalai.**